**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - 2010**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

---

### 1.1 அபிப்பிராயம்

---

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களை பராமரித்து வந்திருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு மற்றும் காசோட்டம் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

#### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

---

(அ) முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்களின் மீது பெறுமானத்தேய்வு செய்யப்படுவதனை தவிர்ப்பதற்காக இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 18 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீது தனித்தனியாக பெறுமானத்தேய்வு கணிக்கப்பட வேண்டிய போதிலும் இத் தேவைப்பாட்டிற்கு முரணாக பல்கலைக்கழகம் மொத்தச் சொத்துக்களின் பெறுமதியின் மீது பெறுமானத்தேய்வினை சாட்டுதல் செய்திருந்தது. ஆகவே கணக்குகளில் காட்டப்பட்டுள்ள ரூபா 81,068,839 பெறுமானத்தேய்வின் சரியான தன்மை, ஒவ்வொரு சொத்தினதும் சரியான நிலைமையினை வெளிப்படுத்தியுள்ளதா எனக் கருத முடியாதுள்ளது.

(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 18 மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 1995 ஒக்தோபர் 05 ஆந் திகதிய 649 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் காணிகளின் பெறுமதியின் மீது பெறுமானத்தேய்வு கணப்பிடப்படக் கூடாது. இருப்பினும் காணியினதும் கட்டிடங்களினதும் பெறுமதிகளை வெவ்வேறாக இனங்காணத் தவறியமை காரணமாக காணிகளின் மீதும் 5% சத வீதத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

(இ) இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 03 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களுடன் உரிமைத்துவ மாற்றக் கூற்றொன்று தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) புத்தகப் பெறுமதி பூச்சியமாக காணப்பட்டதும் தொடர்ந்தும் பாவிக்கப்பட்டு வருகின்றதுமான நிலையான சொத்துக்கள் இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 18 இன் படி மீள விலைமதிக்கப்பட்டு கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 2,191,072 பெறுமதியான 117 நாளேடுகள் மற்றும் பருவகால சஞ்சிகைகள் மீளாய்வாண்டின் இறுதிவரை பல்கலைக்கழகத்தினால் பெற்றுக் கொள்ளப்படாதிருந்த போதிலும் பிழையாக புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் பூர்த்திசெய்யப்பட்ட ரூபா 10,288,750 தொகையான நிர்மாண வேலைகளை காணிகள் மற்றும் கட்டிடங்கள் கணக்கின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக கணக்குகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளாகக் காட்டப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டில் இந்திய அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த மூன்று பேரூந்துகள் (சிடி ரைடர்) பெறுமதியிடப்பட்டு கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வெள்ளி விழா நிதியத்திலிருந்து ரூபா 243,100 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த முச்சக்கர வண்டி 2006 ஆம் ஆண்டிலிருந்து கணக்குகளிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

(உ) பிணைமுறி கடப்பாட்டு மேலதிக அறவீட்டு தொகையாகிய மொத்தம் ரூபா 2,178,090 இனை சென்மதி என கணக்ககுளில் தனியாக காண்பிப்பதற்குப் பதிலாக பெறவேண்டிய பிணைமுறி கடப்பாட்டு கணக்கிற்கு எதிராகச் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2007 தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலம் தொடர்பான சில்லறைக் கடன்கொடுத்தோர் கணக்குகளில் உள்ள தீர்ப்பனவு செய்யப்படாத மீதிகள் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 221,675 ஆக இருந்தது.

(ஆ) வழங்கல் முற்பணம், இடம்பெயர்ந்த பதவியணியினர் சம்பள முற்பணம், கட்டட முற்பணம், சில்லறைக் கடன்பட்டோர் மற்றும் பதவியணியினர் கடன் மீதிகளின் கூட்டுமொத்தமாகிய ரூபா 157,349,632 ஆனது 01 தொடக்கம் 23 வருட கால வீச்சில் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன்காரணமாக இம் மீதிகளின் அறவீடு ஐயத்திற்குாயிதாகவுள்ளன.

(இ) புத்தகப் படிகள் காரணமாக கல்விசார் உத்தியோகத்தர் ஒருவரிற்கு 1997 இல் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 37,455 இது வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கணக்காய்விற்குக் கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி 2000 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையான காலத்தில் உடன்படிக்கைகளையும் பிணைமுறிக் கடப்பாடுகளையும் மீறிய 133 விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 117,530,741 தொகை பெறப்பட வேண்டியிருந்தது. இருந்த போதிலும் இத் தொகையினை தொடர்புடைய விரிவுரையாளர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு 2011 ஜுன் 30 வரை பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

---

கணக்குகளில் காட்டப்பட்டுள்ள ரூபா 1,750,016,314 கூட்டுத் தொகையான சொத்துக்கள், செலுத்தவேண்டியவைகள், பெறவேண்டியவைகள் மற்றும் பெறுமானத்தேய்வு என்பவற்றினை மெய்மையாய்வு அறிக்கைகள், உறுதிப்படுத்தல்கள், காலப்பகுப்பாய்வு, விபரமான பட்டோலைகள் போன்றன இல்லாமை காரணமாக கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

---

பின்வரும் சட்டங்கள், திறைசேரிச் சுற்றறிக்கைகள், அரசாங்க நிதிப் பிரமாணங்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கும் உயர் கல்வி நிறுவனங்களிற்குமான தாபன விதிக் கோவை போன்றவற்றுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதனிக்கப்பட்டன.

(அ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 153 மற்றும் 155 ஆம் பிரிவுகள்

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இல. 03, 16 மற்றும் 18

(இ) நிதிப்பிரமாணங்கள்

------------------------------

இலக்கங்கள் 103(1), 104, 109, 264, 271(2)(பீ), 570, 571, 756, 845, 846(3), 1645 மற்றும் 1646

(ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கும் உயர் கல்வி நிறுவனங்களுக்குமான தாபன விதிக்கோவை

---

V ஆம் அத்தியாயத்தின் 7:6, 7:6:2 மற்றும் 7:8 ஆம் பிரிவுகள்

XX ஆம் அத்தியாயத்தின் 3:1 ஆம் பிரிவு

XXIV ஆம் அத்தியாயத்தின் 3:1 ஆம் பிரிவு

XXV ஆம் அத்தியாயத்தின் 2:2(எப்) ஆம் பிரிவு

XXVI ஆம் அத்தியாயத்தின் 2:4 மற்றும் 5 ஆம் பிரிவுகள்

XXVI ஆம் அத்தியயத்தின் 3:3 ஆம் பிரிவு

XXVII ஆம் அத்தியயத்தின் 9:4 ஆம் பிரிவு

(உ) 1976 ஜுலை 19 ஆந் திகதிய 828 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை

(ஊ) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க, 1995 மார்ச் 16 ஆந் திகதிய 11/1995 அம் இலக்க மற்றும் 2004 திசெம்பர் 27 ஆந் திகதிய 22/99(IV)-2004 ஆம் இலக்க, 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க மற்றும் 2009 யூலை 17 ஆந் திகதிய 09/2009 (I) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைகள்.

(எ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள்

---

i. 1980 பெப்ரவரி 25 ஆந் திகதிய 63 ஆம் இலக்கம்

ii. 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய 30/94 ஆம் இலக்கம்

iii. 2010 பெப்ரவரி 15 ஆந் திகதிய 02/2010 ஆம் இலக்கம்

(ஊ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2007 ஜனவரி 18 ஆந் திகதிய 03 ஆம் இலக்க பெறுமதிசேர் வரிச் சுற்றறிக்கை

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு

#### 2.1.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான பல்கலைக்கழக செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியங்களைக் கணக்கிற்கு எடுக்க முன்னர் முன்னைய ஆண்டுக்கான ரூபா. 686,748,646 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கு ரூபா. 611,306,520 பற்றாக்குறையினை விளைவித்திருந்தது. மீண்டெழும் செலவினங்களுக்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா. 536,400,000 மானியத்தினைக் கணக்கிற்கு எடுத்த பின்னர் மீளாய்வாண்டுக்கான பற்றாக்குறை ரூபா. 74,906,520 வரை குறைவடைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவினங்களுக்காக கிடைத்திருந்த ரூபா. 649,600,000 மானியம் காரணமாக அவ்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா. 37,148,646 வரை குறைவடைந்திருந்தது.

**2.1.2 குறித்துரைத்த நிதியங்களின் பயன்படுத்துகை**

**--------------------------------------------------------------------------------**

பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 29,493,089 தொகையான குறித்துரைத்த நிதியங்கள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படாது நிலையான வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

**2.1.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

**------------------------------------------------------------------**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் பட்டக் கற்கைகள் பீடம் மற்றும் வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவில் சராசரியாக மாதாந்தம் ரூபா 179 மில்லியன் காசு மீதி வைத்திருக்கப்பட்டிருந்த போதிலும் இப் பணத்தினை வட்டியினை ஈட்டித்தரக்கூடிய மூலமொன்றில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இதன் விளைவாக குறிப்பிடத்தக்களவு வருமானம் பல்கலைக்கழகத்திற்கு இழப்பாகியிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தில் விருந்தினர் விடுதி வசதி காணப்படுவதுடன் விருந்தினர் விடுதிக்கு காப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு மீளாய்வாண்டிற்காக ரூபா 248,640 கூட்டுத்தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த விருந்தினர்களிற்காக பல்வேறு வாடி வீடுகளுக்கு வதிவிட கட்டணங்களாக (உணவு மற்றும் வதிவிடம்) ரூபா 528,459 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழகத்திற்கு இந்திய அரசாங்கத்திடமிருந்து மூன்று புதிய பேரூந்துகள் கிடைத்திருந்த போதிலும் இப் பேரூந்துகளைப் பயன்படுத்திக் கொள்வதற்குப் பதிலாக தனியார் வான்களை வாடகைக்கு அமர்த்தியமைக்காக ரூபா 1,000,576 வாடகைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது.

### 2.1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு ஸ்கூட்டர்கள் எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) ரூபா 617,151 பெறுமதியான 35 வகையான பொருட்கள் ஒன்று தொடக்கம் பத்து ஆண்டுகள் வரையிலான காலவீச்சில் களஞ்சியத்தில் பயன்படுத்தாது வைக்கப்பட்டிருந்தன. இவ்விடயம் எனது முன்னைய ஆண்டுகளிற்கான அறிக்கைகளின் மூலமும் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. எனினும், இச் சொத்துக்களைப் பயன்படுத்திக் கொள்வதற்காக 2011 ஜுன் 30 வரை பல்கலைக்கழகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 200,305 கூட்டுமொத்தமான 10 வகையான 5,258 பதிவேட்டுப் பொருட்கள் எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக களஞ்சியத்தில் பயன்படுத்தாது வைக்கப்பட்டிருந்தன.

(ஈ) ரூபா 182,400 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த நேரப் பதிவு இயந்திரம் 2001 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 2,137,500 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 225 இரும்புக் கட்டில்கள் நான்கு ஆண்டுக்கும் மேலாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.1.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

-------------------------------------------------

நூலகப் புத்தக இழப்புக்களின் பெறுமதியாகிய ரூபா 161,633 மீளாய்வாண்டில் பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 2.1.6 செயற்திட்ட தாமதங்கள்

----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழக பெண்கள் விடுதித் தொகுதிக்கு கழிவு நீர் அகற்றல் முறைமையொன்றினை அறிமுகம் செய்வதறகாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு 2008 ஆம் ஆண்டில் மதியுரைக் கட்டண முற்பணக் கொடுப்பனவாக ரூபா 750,375 செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வேலைகள் தொடங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மருத்துவ பீடத்தில் கேட்போர்கூடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 7,611,885 தொகை 1999 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளின் போது நிர்மாணக் கம்பனியொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிர்மாணப் பணிகள் இது வரை முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் நீண்ட தாமதம் காரணமாக நிர்மாணக் கிரயம் பெருமளவில் அதிகரிக்கும் என்பதுடன் இக்கட்டடத்தின் நோக்கம் நிறைவேறியிருக்கவுமில்லை. அதற்கும் மேலாக 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் இதுவரை தொடங்கப்படாத உள்ளக அலங்கார வேலைகளுக்காக கட்டடத் திணைக்களத்திற்கு ரூபா 13,000,000 செலுத்தப்பட்டிருந்தது.

இவ் விடயம் தொடர்பில் 2010 யூலை 29 ஆந் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் இடம்பெற்ற செயன்முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் மேற்படி செயற்திட்டங்களின் மந்தகதியான செயன்முன்னேற்றம் தொடர்பில் கௌரவ உயர் கல்வி அமைச்சர் தீவிர கவனம் செலுத்தியிருந்ததுடன் இதனை விரைவு படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பெறுபேறுகள் தொடர்பில் தனக்கு அறிவிக்குமாறும் பல்கலைக்கழகத்திற்கு ஆலோசனை வழங்கியிருந்தார். அதன் பின்னரும் கூட இது வரை வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. 2011 மார்ச் 14 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக வெளிக்களப் பகரிசோதனையில் உள்ளக கூரையடித்தல், மின்சார இணைப்பு, வாயு சீராக்கல் மற்றும் இருக்கைகள் இது வரை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை என்பது வெளிப்பட்டது. அதன் விளைவாக பல்கலைக்கழகத்தினால் ரூபா 20 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் மருத்துவ பீட மாணவர்களினால் பத்து ஆண்டுகளிற்கும் மேலாக அவ் வசதியினைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(இ) திருநெல்வேலியில் உள்ள மாணவர் விடுதிக்காக நீர்த்தாங்கியொன்றினை நிர்மாணிப்பதற்கு கட்டடத் திணைக்களத்திற்கு 1989 இல் ரூபா 2,000,000 முற்பணத் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும் ரூபா 1,590,000 பெறுமதியான வேலைகள் மாதத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அதன் விளைவாக இவ்வசதியின்றி மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(ஈ) பல்கலைக்கழகத்தில் உள்ளக பிரதேச வலைப்பின்னல்/அகன்ற பிரதேச வலைப்பின்னல் (LAN/WAN) செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தவதற்காக ரூபா 1,458,208 தொகை கொழும்பிலுள்ள கம்பனியொன்றுக்கும் மேலும் ரூபா 10,171,618 எஸ்ஐடீஏ ஐரீ வலைப்பின்னல் செயற்திட்டத்திலிருந்து அதே கம்பனிக்கும் செலுத்தப்பட்டிருந்தது. மேற்குறித்த செயற்திட்டம் தொடர்பில் எவ்வித செயன்முன்னேற்ற அறிக்கைகளும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை. இச்செயற்திட்டமானது 2005 இன் ஆரம்பப் பகுதியில் தொடங்கப்பட்டிருந்த போதிலும் 2011 ஜுன் 30 வரையிலும் இது முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக செயற்திட்டக் குறிக்கோள் எதிர்பார்த்த விதத்தில் அடையப்பட்டிருக்கவில்லை.

(எ) பம்பைமடுவவில் வவுனியா வளாகத்திற்கு நீர்த்தாங்கி ஒன்றையும் நீரேந்து அறையொன்றையும் நிர்மாணிப்பதற்காக 2004 திசெம்பர் 31, 2005 நவம்பர் 16 மற்றும் 2007 ஒக்தோபர் 04 ஆந் திகதிகளில் முறையே ரூபா 3,200,000 ரூபா 3,014,000 மற்றும் ரூபா 5,615,000 ஆன மூன்று முற்பணங்கள் அப்போதைய வடக்கு கிழக்கு மாகாண சபையின் கட்டிட திணைக்களத்தின் பிரதான பொறியியலாளருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

நீரேந்து அறையின் நிர்மாணப் பணிகள் முடிவடைந்திருந்தன. இருந்தபோதிலும் நீர்த்தாங்கி மற்றும் மிகுதி வேலைகள் முடிவடைந்திருக்கவில்லை. அதேநேரம் கட்டிடத் திணைக்களத்தினால் ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. இடைநிறுத்தும் வரைக்கும் ஒப்பந்தகாரருக்கு ரூபா 2,439,956 ஏற்கனவே செலுத்தப்பட்டிருந்தது. மிகுதி வேலைகளுக்காக மற்றுமோர் ஒப்பந்தகாரருடன் 2006 நொவம்பர் 10 ஆந் திகதி ரூபா 5,615,000 பெறுமதிக்கு புதிய உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. ஆயினும் 2011 ஜுன் 30 ஆந் திகதி வரை வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

-----------------------------------------------------------

பொருத்தமான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றைப் பின்பற்றாது அநேக சந்தர்ப்பங்களில் தற்காலிக விரிவுரையாளர்கள், பாடப் போதகர்கள், செயன்முறையாளர்கள் போன்றோர் பிரிவுத் தலைவர்களினால் மேற்கொண்ட கோரிக்கைளின் பேரிலேயே நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

## 2.3 கற்கைநெறிகளும் பரீட்சைகளும்

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பல்கலைக்கழகத்தில் 22 பாடநெறிகளுக்காக பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 5,395 ஆகும். மீளாய்வாண்டில் செய்யப்பட்டிருந்த மொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 487,578,520 ஆகும். ஆண்டுக்கு மாணவர் ஒருவருக்கான சராசரி மீண்டுவரும் கிரயம் ரூபா 90,376 ஆக இருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்தினாலும் நடாத்தப்படுகின்ற பல்வேறு கற்கைநெறிகளுக்கும் பரீட்சைகளை நடாத்த வேண்டிய திகதிகளும் பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டிய இலக்குத் திகதிகளும் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் சில பீடங்களில் குறிப்பிடத்தக்களவு தாமதம் நிலவியமை மேலும் அவதானிக்கப்பட்டது. 1995 ஜுலை 14 ஆந் திகதிய 636 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் பரீட்சைகள் நடைபெற்று மூன்று மாதகாலத்தினுள் பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டிய போதிலும் 4 தொடக்கம் 14 மாத காலவீச்சில் பெறுபேறுகளை வெளியிடுதல் தாமதமடைந்திருந்தது.

## 2.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

பாதிடப்பட்டவைகளுக்கும் உண்மையானவைகளுக்கும் இடையில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் எனது விரிவான அறிக்கையின் மூலம் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களின் பால் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) ஒப்பந்த நிர்வாகம்

(ஆ) நூலக நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) குறித்துரைத்த நிதியங்களின் பாவனை

(உ) செயற்திட்டத் தாமதங்கள்

(ஊ) பெற வேண்டியவைகளும் செலுத்த வேண்டியவைகளும்

(எ) மனித வள முகாமைத்துவம்

(ஏ) பாதீடு